# <u>DEPOSITION OF WITNESS</u>

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No** | : | **C.C.265/2024** | **Date** | : | **15.07.2025** |
| **Deposition of Witness for** | : | **அ.சா.6** | **Taluk** | : | |
| **Name** | : | திரு. மணி | **Calling** | : | **சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்** |
| **Father / Husband Name** | : | | **Religion** | : | |
| **Village** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 15.07.2025**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர்)

<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>

1) நான் தற்போது மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணி புரிந்த பயிற்சி காவல் உதவி ஆய்வாளர் கவிப்பிரியா மற்றும் தங்கவேல் காவல் ஆய்வாளர் பணி இடமாற்றம் பெற்று சென்று விட்டதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சையம் என்பதாலும், வழக்கின் சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறியதாலும், கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 11.06.2024 ம் தேதி, காவல் உதவி ஆயவாளர் நிலைய அலுவலில் இருந்த போது பகல் 12.30 மணிக்கு சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, அ.புதூர் கிராமம், சுண்டமேட்டுரில் காயம்பட்ட அங்கமுத்து (எ) அங்குசாமி அவர்களின் மனைவி குப்பாயி என்பவர் மேற்படி காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த வாக்குமூலத்தின் பேரில் மகுடஞ்சாவடி காவல் நிலையக் குற்ற எண். 170/2024, சட்டபிரிவுகள் 279, 337 IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் வாக்குமூலத்துடன்

இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

3) பின்னர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பயிற்சி காவல் உதவி ஆய்வாளர் கடந்த 11.06.2024ம் தேதி 13.30 மணிக்கு வழக்கின் சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சிகள் சுந்தராம்பாள் மற்றும் கற்பகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர், பட்டியல் சாட்சிகள் சுந்தரம்பாள் க/பெ. மாரி மற்றும் கற்பகம் க/பெ. பழனியப்பன் ஆகியோரைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4) பின்னர் புகார்தாரர் குப்பாயி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். சம்பவ இடத்தில் இருந்த சாட்சி முருகன் மற்றும் சேகர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அரசு மருத்துவமனையில் 12.06.2024 தேதி காயம்பட்ட அங்கமுத்து (எ) அங்குசாமி இறந்து விட்டதாக தகவல் கிடைக்கப்பட்டது, அதன் பேரில் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) மேற்படி வழக்கை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளார். பின்னர் அன்றைய தினமே சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து இறந்துபோன அங்கமுத்து (எ) அங்குசாமி என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் சந்தனதேவன், மாணிக்கம், அமுதா, மாணிக்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேதத்தை இறப்பின் மருத்துவர் ரீதியான காரணத்தை அறியும்பொருட்டு பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள்

மனுவுடன் காவலர் HC 1248 திரு. தங்கமணி அவரின் வசம் ஒப்படைக்கப்பட்டது.

6) பின்னர், அன்றைய தினமே இறந்துபோன அங்கமுத்து (எ) அங்குசாமி என்பவருக்கு பிரேத பரிசோதனை சான்று வழங்கிய சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.முகம்மதுசிராஜ்இமாம் மற்றும் மணிவாசகம் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

7) மேலும், கடந்த 24.06.2024 வழக்கின் நிமித்தமாக எதிரியை கைதி செய்து காவல் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் கடந்த 24.06.2024 ம் தேதி, இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய வாகனமான TN 30 Y 8013 என்ற பதிவு எண் கொண்ட OMNI Car-ரை, சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளார். மேலும் அன்றைய தினமே மோட்டார் வாகன ஆய்வாளர், சங்ககிரி திருமதி.புஷ்பா என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றும், அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் **(மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6) அன்றைய தினமே இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கவிபிரியா மற்றும் தங்கமணி தலைமை காவலர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் காவல் ஆய்வாளர் விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 05.07.2024 ம் தேதி, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச-வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியமளிக்கிறேன். என்று சொன்னால் சரிதான்.. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லவில்லை என்றும், இவ்வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளார். என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி வழக்கு விசாரணையை சரிவர மேற்கொள்ள வில்லை. என்றும், எதிரியின் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

Witness -Sd/-Mani

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/-D.Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.